<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 79/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபாலன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | செல்லையா | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.08.2024

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சிங்கார வனச்சரகம் உடுமலை புலிகள் காப்பபத்தில் வன சரக அலுவலராக இருந்து வருகிறேன் இதற்க முன்பு நான் உடுமலை வன சரகத்தில் வனச்சரகராக பணியில் இருந்த போது கடந்த 29.08.2021 ம் தேதி காலை 8.30 மணிக் கு வனக்காப்பாளர் ஞானசேகரன் என்பவர் எனக்கு போன் மூலமாக கரட்டுர் பீட்டில் 35 வயதுள்ள ஆண் காட்டு யானை தந்தம் இல்லாமல் இறந்து கிடப்பதாக தகவல் கூறினார். பின்னர் வனவர் அங்கு சென்று விட்டார் நான இந்த தகவலை உடனடியான மின்னல் அறிக்கை பதிவு செய்து கனம் நீதிமனற்த்திற்கு அனுபப் வைததேன யானை இறந்து கிடந்த இடம் துாரம் என்பதாலும் மாலை நேரத்தல் திரேக பரிசோதனை கமேற்கொள்ள கூடாது என்றும மறுநாள் காலை 11.00 மணிக கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. யாணைக்கு பிரேத பரிசோதனை மருத்துவர் சுகுமாறன் மற்றும் அரவிந்து ஆகியோர் மேற்கொண்டனர். அந்த சமயத்தல் நானும் மாவட்ட வன அலுவலர் மற்றும் உதவி வன பாதுகாவலர் ஆகியோர் சென்றோம்.

2. யாணை வலது பக்கம் சாய்ந்து படுத்துகிடந்தது. இடது புறம் யாணையின் தந்தம் வெட்டப்பட்டுருந்தது. அந்த யாணை ஒற்றை கொம்பு யாணை என்றும அந்த பகுதியில் உலா வந்தது என்றும் அந்த பகுதி மக்கள் பார்த்திருந்தனர் என்றும் , மற்றொரு தந்தம் உடலின் உட்பகுதியில் இருந்தது. தந்தத்தின் நீளம் 37 cm மற்றும் சுற்றளவு 34 cm ஆகும். பால்ரஸ் குண்டு –2 காலின் பகுதியில் இருந்தது. ஒரு குண்டு உடலில் மூடப்பட்டுளள நிலையில் காதோரத்தில் இருந்தது .மருத்துவர் இந்த குண்டுகளாட்ல உயிரிழப்பு ஏற்பட இலலை என்று கூறினார். இதயம் நுரையீரல் குடல் ஆகியவற்றை தனித்தனியாக எடுத்து ஆய்வறிக்கைக்கு நீதிமன்றம் அனுமதியுடன் அனுப்பி வைத்தேன். ஆய்விற்காக தமிழ்நாடு வனஉயிரின மேலாண்மை சென்னை, கால்நடை மருத்துவ கல்லூாரி, கோவை அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. தனிப்படை அமைத்து இறந்து நாளிலிருந்து ஒற்றை தந்தம் குறித்து விசாரிக்க உதவி இயக்குநர் அவர்கள் தனிக்குழுவை அமைக்க உத்தரவிட்டார் அதில் உதவி வன காப்பாளர் கணேஷ்ராம் அவர்கள தலைமையில நானும் வனப்பணியாளர் ஞானசேகரன் வனவர் கோபாலகிருஷ்ணன் வனவர் தங்கபிரகாஷ் ஆகியோர் இருந்தோம்.

3. 02.09. 2021 ம் தேதி மாலை 5.00 மணிக்கு கரட்டுர் பிவிவு உடைந்த பாலம் அருகில் வெள்ளை நிற உர சாக்கு பை மற்றும் மஞ்சள் நிற உர சாக்கு பை எதிர் எதிர் திசையில கல்லுக்கு இடையில் வைத்திருந்தார்கள். அதை எடுத்து பார்த்த போது ஒற்றை தந்தம் இருந்தது. அதன் சுற்றளவைகளை அளந்து பார்த்த போது இறந்த ஆண்யாணையின் ஒற்றை தந்தத்துடன் ஒத்திருந்தது. நீதிமன்றத்திற்கு அதனை அனுப்பி வைக்கப்பட்டது. ஸ்தல மகசர் ஸ்தல வரைபடம் கோபால கிருஷ்ணன் மூலமும், H நமுனா ஞானசேகரன் மூலம் தயார் செய்யப்பட்டது. இறந்து கிடந்து யாணையில் இருந்து திருடப்பட்ட தந்தம் தானா என்று உறுதி CCNB hydrabad க்கு அனுப்பி வைத்தோம். தந்தத்தை நீதிமன்றத்தில் வைத்து சொத்து பதிவேட்டில் பதிவு செய்தோம்.

4. அந்த தந்தந்தை நீதிமன்றம் இடைக்கால பொறுப்பில் எங்களிடம் ஒப்படைத்துள்ளனர். தற்சமயம் வனச்சரக அலுவலத்தில் உள்ளது. நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த தயாராக உள்ளோம். பின்னர் தனிக்குழு கரட்டுர் 22.09.2021 ம் தேதி எதிரிகளை தேடி கண்டுபிடிக் கநடவடிக்கை மேற்கொண்ட போது மாலை 5.00 மணியளவில் நல்லாறு பகுதியில் கல்லின் மேல் 4–5 நபர்கள் உட்கார்ந்திருந்தனர். எங்களை பார்த்ததும் 2 பேர் ஓடினார். 2 பேர் பிடிப்பட்டனர் சின்னதங்கம் மற்றும் வேலு பிடிப்பட்டனர். அவர்களை விசாரணை செய்த போது யாணை தந்தத்தை சவெட்டி எடுத்த குற்றத்தை ஒப்புக் கொண்டனர். மேலம் 3 நாட்களுக்கு பிறக இறந்து கிடந்த யாணையின் தந்தத்தை வெள்ளளைசாமி

கோடாரியால் வெட்டினார் என்றும், திருமண் என்பவர் அறுவாளால் வெட்டினார் என்றும நாங்கள இருவரும் வெட்டும் பொழுது யாராவது வருகிறார்களா என்று பார்த்ததை ஒப்புகொண்டனர். சின்னதங்கத்திடம் தங்கபிரகாஷ் வனவரும், நான் வேல் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் தனித்தனியாக பெற்றோம். என்னிடம் காட்டப்படும் வேல் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்யபட்ட இடத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட மேற்படி பகுதியானது **அ.சா.ஆ. 2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அந்த தந்தத்தை வெட்டி வியாபாரம் செய்யும் நோக்கில் எடுத்ததாக கூறினார்கள். பின்னர் அந்த தந்தத்தை உடைந்த பாலம் பகுதியில கல்லுக்கு அடியில் வெள்ளை மற்றும் மஞ்சள் நிற சாக்கு பையில் மறைத்து வைத்திருந்ததாக கூறினார்.

5. அந்த இடத்தில் ஸ்தல மகசர் ஸ்தல மகசர் கோபால கிருஷ்ணன் தாயர் செய்தார். குற்றவாளிகளை அந்த பிடித்ததற்கான H நமுனாவை வனக்காப்பாளர் தயார் செய்தார். 2 எதிரிகயையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் தப்பி ஓடிய எதிரிகளை தேடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது வெள்ளை சாமி, திருமண் ஆகியோர் மாண்புமிகு சென்னை நீதிமன்றத்தில் முன் பிணையம் பெற்று கொண்டனர். எதிரிகள் 3 மற்றும 4 இருவரும் ஒப்புதல் வாக்குமூலம் தப்பி ஓடிய இருவர் பெயரை தவறுதாலாக கொடுத்திறருந்தனர். அதனால் எதிரி 1 என்ற இடத்தில வெள்ளை சாமி என்ற பெயரையும் எதிரி 2 இடத்தில திருமண் என்ற பெயரை சேர்த்தோம். நீக்கம் செய்யப்பட்ட திருமண் அப்பா பெயர் காளியப்பன் ஆவார். சின்னத்தங்கம் மற்றும் வேலு ஆகியோரை திரும்பவும் விசாரித்தோம் வனக்காப்பாளர் ஞானசேகரன் வாக்குமூலம் பதிவு செய்தார். அதில் பெயர் மாற்றம் பற்றி விவரமும் மற்றும் ஊரிலும் விசாரித்து தெரிந்து கொண்டோம். அதற் பிறகு வழக்கின் விசாரைணை முடித்து படிவம் எ ன் கீழ் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாககல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வனக்காப்பாளர் எந்த நேரம் சம்பவம் இடத்தை அடைந்தார் என்றால் 29.08.2021 காலை 8.30 மணியளவில். F மின்னல் அறிக்கை போடப்பட்ட நேரம் என்ன என்றால் அன்றைய தினமே போடப்பட்டது. அதை அன்றை ய தினமே நீதிமனறத்திற்கு அனுப்பவில்லை எனன்றால் சரிதான். காட்டுபப்பட்டி லட்சுமணன் என்பவர் என்னவாக வேலை செய்கிறார் என்றால் வனக்காவலர் ஆக உள்ளார். அவரது பணி என்ன என்றால் வனக்காப்பாளருக்கு உதவி செய்வார். காட்டு பகுதிகளை சுற்றி பார்ப்பது தான அவரது பணி. காட்டுப்பட்டி என்ற இடத்திலும் உடைந்த பாலம் பகுதியிலும் வாட்சிங் டவர் உள்ளதா என்றால் உள்ளது.

2. என்ன விவசாயம் செய்கிறார்கள் என்றால் வானம் பார்த்த பூமி விவசாயம் செய்கிறார்கள். அந்த பூமிக்கு உரங்க எதுவும இடுவது இல்லை என்றால் சரிதான். சம்பவ இடமான சொல்லப்பட்ட இடத்தில் வஞ்சி என்பவர் அங்கு தங்கி என்ன விவசாயம் செய்திருந்தார் எனறால் பீன்ஸ் எடுக்கப்பட் காலி நிலமாக இருந்தது. மேற்கு பருவமழைக்காக தான் பீன்ஸ் பயிரிட்டு அது ஆகஸ்ட்– செப்டம்பர் அறுவடைக்கு தயார் ஆகும் என்றால் சரிதான். வஞ்சியு் அவரது கஞ்சி மலையானும் அங்கு தங்கி விவசாயம் செய்கிறார்காள என்றால் ½ கிமீ தள்ளி.

3. வஞ்சி விவசாயம் செய்யும் இடத்திற்கு வடக்கில் யாணை இறந்து கிடந்தது. அவர்கள் பூமி சுமார் 8 ஏக்கர் அளவு இருக்கும் என்றால சரிதான். உங்கள கட்டுப்பாட்டுக்குள் இருக்கும வனத்தில் யாணை இறப்பு எற்பட்டால் இறப்பிற்கு காரணம் பற்றி விசாரித்தார்களா என்றால்
எதிரிகளை கைது செய்து போது உடுமலை வருவாய் கோட்டாச்சியர் அலுவலத்தில் முற்றுகை போராட்டம் நடத்தினார் என்றால் சரிதான். 3,4 எதிரிகள் தைலப்பில்லை ஏற்றி மாடு வைத்து செய்யும் விவசாயம் எசெய்யும் நபர்களுக்கு விற்ற வருகிறார்கள் எனன்றாலும அவ்வாறு சென் றபோது ஆழியார் கைகாட்டி பகுதியில் அவர்களை கைது செய்துள்ளிர்கள் என்றாலும் தற்சமயம் வழக்கிற்ககா பொய்யாக சாட்சியம் அ ளிக்கிறிர்கள் என்றால் 3,4 எதிரிக் டிரைவர்கள் அவர்கள் மதுரைக்கு பீன்ஸ் வியாபாரம் செய்பவர்கள். ஆனால் யாணை இறந்த மறுநாள் 30 ம் தேதி மதுரைக்கு சென்று இந்த விசாரணை நடைபெறுவதால் அங்கேயே 3 நாட்கள் தங்கி விட்டார்கள்.

4. யாணை இறந்து எத்தனை நாள் கழித்து தகவல் கிடைத்தது என்றால் மருத்துவரின் வாக்குமூலத்தின் படி இறப்பை கணக்கிட்டால் 4 வது நாள் தகவல் கிடைத்தது. உங்களுக்கான பணி, ரோந்து பணி உத்தரவு ஆகியவற்றை பணிப்பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்குப்படி வெட்டியதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

5. இரண்டு உரச்சாக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காட்டுப்பட்டி, புலிப்பட்டி என்பது மக்கள் நடமாடும் பகதி என்றாலும், அந்த வழியில் இருந்து 600 மீ தொலைவில் தான் யாணை இறந்துகிடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இடத்தில் தங்கி இருந்த கஞ்சிமலையானையோ ஊர் மக்களையோ விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தோம். ஹைத்ரபாத்தில் இருந்து பெற்றப்பட்ட ஆய்வறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இன்னும் பெறப்படவில்லை.

6. ஒப்புதல் வாக்குமூலம் என்ன முறையில் சொல்கிறார்களே அந்த முறையில் தான் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது தெரியுமா

என்றாலும், நீதிமன்ற பிணையின்பேரில் உங்களிடம் கையெழுத்திட்டு வந்தபோது எதிகளிடன் ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டும் எனில் நீதிமன்ற உத்தரவின் பேரில் வாங்க வேண்டும் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலங்களை நீங்களே தயார் செய்து எதிரிகளை மிரட்டி கையொப்பம் வாங்கியுள்ளிர்கள் என்றால் சரியல்ல. ரோந்திற்கு செல்லும்போது என்ன கொண்டு செல்விர்கள் என்றால் கத்தி, பெயிண்ட் மார்க், ஆடைகள் மற்றும் காலணிகள்.

7. இந்த வழக்கில் விடுவித்த திருமன் த/பெ. காளியப்பன் எதிரியும் 3ம் எதிரியும் சகோதரர்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை பேர் ஓடினார்கள் என்று உறுதியாக கூற இயலாது என்றால் சரிதான். யானை இறந்த பின்னிட்டு யானையை திருப்பி படுக்க வைக்க மக்கள் தான் உதவி செய்தார்கள் என்றால் சரிதான். உங்களுக்கு தேசிய அளவில் யானை இறப்பிற்கு பிரச்சனை ஆகும் என்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய அழுத்தத்தில் எதிரிகள் மீது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல. 3மற்றும் 4 எதிரிகள் பிணைய சமயத்தில் கையெழுத்து செய்து வந்த நிலையில் 1 மற்றும் 2ம் எதிரிகளை விசாரித்ததால் இவர்கள் முன் பிணை பெற்றார்கள் என்றால் சரிதான்.

8. 1 முதல் 4 எதிரிகள் இந்த குற்ற வழக்கில் ஈடுபடவில்லை என்றாலும், பொய்யாக இவ்வழக்கில் சேர்த்துள்ளிர்கள் என்றாலும் சரியல்ல. மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.